வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 3.3.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

உலகின் வியத்தகு உயிரி பன்முகத் தன்மையை பேணிப் பாதுகாக்க, அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இந்தியா சுயசார்பை எட்ட, பொதுத் துறை, தனியார் துறை ஆகிய இரண்டுமே மிக முக்கியம் என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

பால்வளத் துறையினால், ஊரக வளர்ச்சி மற்றும் சிறு விவசாயிகளின் வாழ்க்கையும் மேம்படுவதாக மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

புதுச்சேரி ராஜீவ்காந்தி அரசுப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் புதிய எம்ஆர்ஐ ஸ்கேன் இயந்திரத்தை துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

மோடி-வனவிலங்கு

உலகின் வியத்தகு உயிரி பன்முகத் தன்மையை பேணி பாதுகாக்க, ஒவ்வொருவரும் மறுஉறுதி ஏற்க வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று, உலக வனவிலங்கு பாதுகாப்பு தினத்தை ஒட்டி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், அவர் இவ்வாறு வலியுறுத்தி உள்ளார். உலக அளவிலான உயிரி பன்முகச் சூழலில், எல்லா

உயிரினங்களுக்கும் முக்கிய பங்கு இருப்பதால், பல்லுயிர் சூழலை பாதுகாத்து எதிர்கால தலைமுறைக்கு வழங்கும் பொறுப்பு அனைவருக்கும் இருப்பதாக, அவர் கூறி உள்ளார்.

இதற்கிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, குஜராத் மாநிலம் சாசன் கீர் தேசிய பூங்காவில், தேசிய வனவிலங்கு வாரியத்தின் 7-ஆவது கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தினார். மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் மற்றும், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும், வனவிலங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இது குறித்து கூடுதல் விவரங்கள்..................

(வாய்ஸ்)

குஜராத் மாநிலம் ஜுனாகாத் பகுதியில் வனவிலங்குகள் குறித்து தேசிய தகவல் மையம் அமைக்கும் பணிகளுக்கு, பிரதமர் இக்கூட்டத்தின் போது, மெய்நிகர் முறையில் அடிக்கல் நாட்டினார். ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை பற்றிய, 16-ஆவது கணக்கெடுப்பு பணிகளையும் அவர் தொடக்கி வைத்தார். மனிதர்களுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையிலான பிணக்குகளை கையாள, கோவையில் அமைக்கப்பட்டுள்ள செவ்வியல் மையத்தையும் பிரதமர் திறந்து வைத்தார்.

முன்னதாக கீர் தேசிய பூங்காவில் அவர் கானகப் பயணம் மேற்கொண்டு சுற்றிப் பார்த்தார். களப் பணியாளர்களுக்கான கண்காணிப்பு

வாகனங்களை, அவர் தொடக்கி வைத்து, பணியாளர்கள் மற்றும் வழிகாட்டிகளுடன் கலந்துரையாடினார்.

கீர் வனப் பகுதியில், அரசு உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் கூட்டு முயற்சி காரணமாகவே, ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார். ஆசிய சிங்கங்களின் வாழ்விடங்களை பேணிக் காப்பதில் பழங்குடி சமூகத்தினர் மற்றும் பெண்களின் பங்களிப்பையும் அவர் பாராட்டி உள்ளார்.

*ராஜ்நாத்*

பொருளாதார சுயசார்பை நோக்கிய இந்தியாவின் பயணத்தில், பொதுத் துறை, தனியார் துறை ஆகிய இரண்டுமே மிக முக்கியம் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். குறிப்பாக பாதுகாப்பு உற்பத்தி துறையில் தனியார் பங்கேற்பு மிக அவசியம் என்று, அவர் இன்று புதுடெல்லியில், முப்படையினர் நலப் பணிகளுக்கான கொடி நாள் வசூலில் சிஎஸ்ஆர் நிதி மூலமான கார்ப்பரேட் நிறுவனங்களின் பங்களிப்பு குறித்த மாநாட்டில் பேசுகையில் கூறினார். இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி காரணமாக, தனிநபர் வருமானம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், அடுத்த 2 ஆண்டுகளில் உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் திசையில் இந்தியா பயணித்து வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். நாட்டின் எல்லைகளைப்

பாதுகாப்பதில், பாதுகாப்பு படையினரின் அயராத அர்ப்பணிப்பு, போற்றத் தக்கது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

வேவ்ஸ் போட்டி

மும்பையில், வரும் மே 1 முதல், 4ஆம் தேதி வரை நடைபெற உள்ள, ஊடக மற்றும் கேளிக்கைத் துறைக்கான வேவ்ஸ் உலக மாநாட்டை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, India- A Bird's View Challenge போட்டிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன. இது குறித்து கூடுதல் விவரங்கள்…

(வாய்ஸ்)

இந்தியாவின் வனப்பையும், பன்முகத் தன்மை மற்றும் கலாச்சார மரபுகளை கழுகுப் பார்வையில் வெளிப்படுத்தும் வகையிலான, 2 முதல் 3 நிமிட வீடியோ படங்களை, டிரோன் பைலெட்டுகள் மற்றும் திரைத் துறையினர், WAVES- Bird's View Challenge போட்டிக்கு சமர்ப்பிக்கலாம். நமோ டிரோன் தீதி திட்ட பயனாளிகளும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். போட்டியில் பங்கேற்க விரும்புவோர், becil.com இணைய தளம் மூலம் பெயர் பதிவு செய்து கொண்டு, வரும் 15-ஆம் தேதிக்குள் வீடியோ படங்களை சமர்ப்பிக்க வேண்டுமென்றும், முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்படும் 10 வீடியோக்களின் பட்டியலில் இருந்து, முதல் 3 பரிசுகள், மற்றும், 2 ஆறுதல் பரிசுகளுக்கான வீடியோ படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, WAVES மாநாட்டின் போது, பரிசுகள் வழங்கப்படும்

என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பரிசுத் தொகை பற்றிய விவரங்கள், விரைவில் வெளியாக உள்ளன.

*பிளஸ் டூ*

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பிளஸ் டூ தேர்வுகள் இன்று தொடங்கி உள்ளன. வரும் 25-ஆம் தேதி வரை இத்தேர்வுகள் நடைபெறும். மொத்தம் 3 ஆயிரத்து 316 தேர்வு மையங்களில், 8 லட்சத்து 21 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள், பிளஸ் டூ பொது தேர்வு எழுதுகிறார்கள். தேர்வு நடைமுறைகளைக் கண்காணிக்க 4 ஆயிரத்து 800-க்கும் மேற்பட்ட பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.தேர்வு மையங்களில் மொபைல் போன்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே 11-ஆம் வகுப்பு தேர்வுகள், வரும் 5-ஆம் தேதியும், 10-ஆம் வகுப்பு தேர்வுகள், வரும் 28-ஆம் தேதியும் தொடங்க உள்ளன.

*அமித் ஷா-பால்வளம்*

பால்வளத் துறையினால், நாட்டின் முன்னேற்றம் மட்டுமின்றி, ஊரக வளர்ச்சி மற்றும் சிறு விவசாயிகளின் வாழ்க்கையும் மேம்படுவதாக மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். புதுடெல்லியில் பால்வளத் துறையின் நீடித்த வளர்ச்சி குறித்த பயிலரங்கு ஒன்றை தொடக்கி வைத்து பேசிய அவர், நாட்டு மக்களின் ஊட்டச் சத்து நிலவரங்களை மேம்படுத்துவதிலும், பால்வளத் துறைக்கு முக்கிய பங்கு இருப்பதாக கூறினார். பால்வளத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களில் 62 சதவிகிதம் பேர் பெண்கள் என்பதால் பெண்களின் அதிகாரப்

பங்கேற்பிலும் பால்வளத் துறை முக்கிய பங்காற்றுவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் 80 சதவிகித மாவட்டங்களில் பால்வள ஒன்றியங்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதே 2-ஆம் கட்ட வெண்மை புரட்சியின் நோக்கம் என்று மத்திய அமைச்சர் தெரிவித்தார். பால்வளத் துறையின் செயல்பாடுகளில் இயற்கை ஆதாரங்களின் பயன்பாட்டை சுற்றுச் சூழலுக்கு ஏற்ற விதத்தில் முறைப்படுத்தி, விரையங்களை தவிர்ப்பதன் மூலமாகவே 2-ஆம் கட்ட வெண்மை புரட்சியை சாதிக்க முடியும் என்றும் அவர் கூறினார். மத்திய பால்வளத் துறை இணை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், இந்தியாவின் பால் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில், 63 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாக தெரிவித்தார்.

புதுச்சேரி-ஸ்கேன்

புதுச்சேரியில் ராஜீவ்காந்தி அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் 11.5 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள எம்ஆர்ஐ ஸ்கேன் இயந்திரத்தை இன்று துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தனர். சட்டமன்ற உறுப்பினர் திரு கே எஸ் பி ரமேஷ், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ரவிசந்திரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். பின்னர் முதலமைச்சர் திரு ரங்கசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில்

ராஜீவ்காந்தி குழந்தைகள் மருத்துவமனையை, தென்னிந்தியாவின் சிறந்த குழந்தைகள் மருத்துவமனையாக தாங்கள் மாற்றி இருப்பதாக கூறினார். சுகாதாரத் துறை, நிர்வாகத் தளர்வுகளை நீக்கி இன்னும் வேகமாக செயல்பட வேண்டும் என்றும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்றும் கூறினார்.

*என்சிசி-கைலாஷ்நாதன்*

புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்று திரும்பி உள்ள புதுச்சேரியைச் சேர்ந்த என்சிசி மாணவர்களுக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று ராஜ்நிவாசில் தேநீர் விருந்து அளித்தார். கடும் முயற்சி மூலம் பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்று புதுச்சேரிக்கு பெருமை சேர்த்திருப்பதாக அவர் பாராட்டினார். இந்த வெற்றிக்கு பாடுபட்ட போது கிடைத்த அனுபவங்கள் வாழ்நாள் முழுவதும் உதவிகரமாக இருக்கும் என்று அவர் கூறினார். நாட்டின் எதிர்காலம் இளைஞர்களின் கையில் இருப்பதால், பிரதமர் திரு நரேந்திர மோடியின், முன்னேறிய இந்தியா என்னும் கனவை நிறைவேற்றவதில், இளைஞர்கள் தொடர்ந்து முக்கிய பங்காற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

*புதுச்சேரி-சந்திப்பு*

சென்னையில் உள்ள பிரிட்டீஷ் துணை தூதர் திருமதி ஹலிமா ஹாலண்ட், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு ரங்கசாமியை மரியாதை நிமித்தம் சந்தித்தார். கல்வி,சுகாதாரம், சுற்றுலா போன்ற துறைகளில் புதுச்சேரி

சிறந்து விளங்குவதை திருமதி ஹாலண்ட் பாராட்டினார். புதுச்சேரி அரசின் நலத் திட்டங்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருப்பதை அறிந்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும், முதலமைச்சர் திரு ரங்கசாமியின் மக்கள் பணி மேலும் சிறக்க வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

*காரைக்கால்-குப்பை*

காரைக்காலில், தனியார் பள்ளி என்எஸ்எஸ் மாணவர்களின், தூய்மையே சேவை விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் திரு சோம சேகர் அப்பாராவ் கொடி அசைத்து தொடக்கி வைத்தார். முன்னதாக பள்ளி நிர்வாகமும், பெற்றோர்-ஆசிரியர் நலச் சங்கமும் இணைந்து, குப்பையில்லா நகரம்- காரைக்கால் என்ற தலைப்பில் நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சியிலும் சிறப்பு விருந்தினராக அவர் கலந்து கொண்டு உரையாற்றினார். மக்கும் குப்பைகளை உரமாக மாற்றி, மக்காத குப்பைகளை மறுசுழற்சி செய்தால் தான், குப்பைகள் ஒழியும் என்று அவர் கூறினார். பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை முற்றிலும் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

*சைபர்-சட்டம்*

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில் நுட்பங்களால் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருகின்ற போதிலும் அரசு இத்தகைய குற்றங்களை தடுக்க கடும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் கூறி உள்ளார். சைபர் குற்றங்களும் -பெண்களும் என்ற தலைப்பில்,

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பயிலரங்கில் உரையாற்றிய அவர் பெண்களின் கண்ணியத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில், சட்டங்கள் திருத்தப் பட்டுள்ளதாக தெரிவித்தார். அதேசமயம் பெண்களும், டிஜிட்டல் வசதிகளின் பயன்பாட்டில் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும், பிரச்சனை ஏற்பட்டால் உடனுக்குடன் புகார் பதிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி விஜயா ராஹத்கர், இந்நிகழ்ச்சியில் பேசுகையில், தற்போது பெண்கள் உட்பட அனைவரின் வாழ்விலும் டிஜிட்டல் வசதிகள் பின்னிப் பிணைந்துள்ளதால் குறிப்பாக பெண்களின் ஆன்-லைன் பாதுகாப்பிற்கு, அதிக முக்கியத் துவம் ஏற்பட்டிருப்பதாக கூறினார். பெண்களின் ஆன்-லைன் பாதுகாப்பிற்கு ஏற்ப சைபர் சட்டங்களை மாற்றுவது குறித்து, ஆணையம் இதுவரை, பிராந்திய அளவிலான 6 மறுஆய்வுக் கூட்டங்களை நடத்தி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் ஆன்-லைன் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு அரசுத் துறைகள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இப்பயிலரங்கில் கலந்து கொண்டனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

உலகின் வியத்தகு உயிரி பன்முகத் தன்மையை பேணிப் பாதுகாக்க, அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இந்தியா சுயசார்பை எட்ட, பொதுத் துறை, தனியார் துறை ஆகிய இரண்டுமே மிக முக்கியம் என்று, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

பால்வளத் துறையினால், ஊரக வளர்ச்சி மற்றும் சிறு விவசாயிகளின் வாழ்க்கையும் மேம்படுவதாக மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

புதுச்சேரி ராஜீவ்காந்தி அரசுப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் புதிய எம்ஆர்ஐ ஸ்கேன் இயந்திரத்தை துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------